என்கிற மாணவியின் இரண்டு காதணிகள், ஒரு மோதிரம். ஒரு கடிகாரம்; செல்வி பத்மஜான், செல்வி எமிலி என்கிற மாணவி களிடமிருந்து முறையே முக்கால் சவரன் மதிப்புள்ள காதணியும், 75 ரூபாய் மதிப்புள்ள புடவை—ஆகியவை களவு போய் விட்டதாகப் புகார் செய்யப்பட்டது. குவார்ட்டர்சில் வேலை செய்யும் பணியாளர்கள் இதில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று போலிசார் அவர்களை விசாரித்தனர். போதுமான துப்பு இன்னும் கிடைக்கவில்லை.

பி. டி. ஆசிரியர் மாநாடு

*232 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 மார்ச் மாதம் கோவை மாவட்டத்தில் நடந்த பி.டி. ஆசிரியர்கள் மாநாட்டின் முடிவை ஒட்டி அவர்களின் கோரிக்கை கள் அரசுக்கு அனுப்பப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அந்த மாநாட்டிலே எழுப்பப்பட்ட பல கோரிக்கை களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. சில அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்னென்ன ? அவற்றில் எவை அரசினரால் கவனிக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளி களோடு இணைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார் கள். அதற்கு நடவடிக்கை எடுத்து 13—1—1970-ம் தேதியன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். வீட்டு வாடகைப்படி தருவதைப் பற்றி இப்போது இருக்கிற வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. மருத்துவ வசதி எல்லா ஆசிரியர்களுக்கும் செய்து தரப் பட வேண்டுமென்பதும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாநில அரசின் அவார்டு வழங்கப்பட வேண்டுமென்று கோரி யிருக்கிறார்கள். ஏற்கெனவே துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமே ஸ்டேட் அவார்டு வழங்கப்பட்டு வருகிறது. இது 35 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது தற்போது மேலும் 10 மாவட்டங்கள் அதிகப்படுத்தி 45 மாவட்டங் களில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவார்டு வழங்கப்பட இருக்கிறது. அந்த அவார்டை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்

கும் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டில் இருந்து உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அவார்டு தரப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு கோரிக்கை படியைச் சம்பளத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்பது. இது எல்லாத் துறையினரையும் பொருத்த பிரச்சினை. இதைச் சம்பளக் குழு கவனித்துக் கொண்டிருக்கிறது. சம்பளக் குழு இது பற்றிய தீர்மானத்தை எடுத்த பிறகு இது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பி.டி. டிரெயினிங்குக்கு எடுக்கும்போது மூன்று மாதம் தமிழாசிரியர்கள் ஆக வேலை செய்தால்தான் எடுத்துக்கொள்ளுகிற நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக மாற்றம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்ததா? அரசு அதிலே மாறுதல் செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Building for Sundhakkudi High School.

* 233 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the construction of a high school building in Sundhakkudi village of Ariyalur Panchayat Union in Tiruchirappalli district was sanctioned in 1963;

(b) the total estimate of the construction; and

(c) whether construction of the school building has been completed?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(அ) ஆம்.

(இ) ரூபாய் 25,000.

(உ) கட்டிட வேலை தரைமட்டம் வரை பூர்த்தி அடைந்துள்ளது. வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. நா. காசிராமன் : இந்தப் பள்ளிக்கூடத்தில் எத்தனை மாணவர்களுக்கான வசதியோடு கட்டடம் கட்டப்படுகிறது? இந்த வேலை எப்போது பூர்த்தியாகும் என்று அரசு உறுதி கூற முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எவ்வளவு மாணவர்களுக்கு என்று குறிப்பு இல்லை. 25,000 ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படுகிறது. இப்போது தரைமட்ட அளவுக்கு (ஃப்ளோர் லெவல்) வந்திருக்கிறது. இது விரைவில் முடிக்கப் பெறும் என்று தலைமைப் பொறியர் அறிவித்திருக்கிறார்.

திரு. ஆர். கருப்பையா : இந்தக் கட்டடம் தரைமட்ட நிலையிலேயே கடந்த நான்கு ஆண்டுகளாக நின்று வருகிறது. இதைப்பற்றி நாங்கள் பல முறை சர்க்காரிடம் எடுத்துச்